

தேனி வடக்கு மாவட்டம் பூதிப்புரம் பேரூராட்சி பகுதியில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. துவக்கி வைத்தார். உடன் பேரூராட்சி தலைவர் பேரூர் செயலாளர் கவியரசு,போடி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஐயப்பன், பேரூராட்சி துணைத் தலைவர் பொன்னையன், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் விக்னேஸ்வரன், மாவட்ட மருத்துவ அதிகாரி ஜவகர்லால், முன்னாள் பேரூர் செயலாளர் பால்பாண்டி மற்றும் கழக முன்னோடிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை நகர் தி.மு.க. இலக்கிய அணி சார்பில்

# தமிழாசிரியர்களுக்கு விருது வழங்கும் விழா!

## 102 தமிழாசிரியர்களுக்கு விருது!

### கவிச்சுடர் கவிதைப்பித்தன் - மு. தென்னவன் பங்கேற்பு!

*சிவகங்கை, நவ.23-*

*சிவகங்கை நகர் தி.மு.க மற்றும் நகர இலக்கிய அணி சார்பில் சிவகங்கைஆனந்தா தனியார் திருமண மண்டபத்தில் தலைவர் கலைஞரின் 102 வந்து பிறந்த நாளை முன்னிட்டு 102 தமிழ் ஆசிரியர்களுக்கு கலைஞர் விருது வழங்கும் விழா நகர் கழக செயலாளர் சி. எம். துரை.ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் நகர் தி.மு.க. இலக்கிய அணி அமைப்பாளர் கே . முத்து கண்ணன் வரவேற்று பேசினார்.இந்த நிகழ்ச்சியில் 102 தமிழ் ஆசிரியர்களுக்கு மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிதைப் பித்தன் முன்னாள் அமைச்சர் இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன் ஆகியோர் கலைஞர் விருது வழங்கி பாராட்டினார்கள். இந்த நிகழ்ச்சியில் மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் திருமதி வேங்கை ப்ரியா பிரபாகரன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் சிவமுத்துவளவன். ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் .*

*இந்த விழாவில் தமிழாசிரியர்களுக்கு விருதுகள் வழங்கி முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் சிறப்புரையாற்றிய தாவது. தலைவர் கலைஞர் அவர்கள் இலக்கிய அணியை ஆரம்பித்ததன் நோக்கம் தமிழ் மொழியை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் ஆரம்பித்தார். நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு கழகத்தில் பல்வேறு அமைப்புகள் இருக்கின்றது. ஆனால் இலக்கிய அணி என்பது தமிழை மையமாகக் கொண்டு தமிழ் மொழிக்காக பாடுபட்டவர்களை பாராட்ட வேண்டும். தலைவர் கலைஞரின் எண்ணம் இன்று சிவகங்கையில் முதன் முதலில் நிறைவேறி உள்ளது. இந்த ஏற்பாட்டினை செய்த சிவகங்கை நகர் இலக்கிய அணிக்கு பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறேன். முதல் முறையாக மாநில அளவில் சிவகங்கையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி யை ஏற்பாடு செய்த வர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த தமிழாசிரியர்களுக்கான பாராட்டு விழாஇலக்கிய அணி சார்பில் மாவட்டம், மாநிலம் முழுதும் தொடர வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்கான ஏற்பாடுகளை இலக்கிய அணி மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். காரைக்குடி தலைவர் கலைஞர் தமிழ்ச்சங்க நிறுவனர் என்ற முறையில் இதில் கலந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாறு மு.தென்னவன் பேசினார் .*

*இந்த நிகழ்ச்சியில் நகர தி.மு.க. இலக்கிய அணி துணை சி.பி.அதியமான் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ராஜ அமுதன், நகர் மன்ற உறுப்பினர் ஜெயகாந்தன் , சுப.ஜெயக்குமார், ஆகியோர் கலந்து கொண்டனர்கள் நிகழ்ச்சி ஏற்பாடுகளை நகர் இலக்கிய அணி அமைப்பாளர் கி.முத்து கண்ணன் தலைமையில் துணை அமைப்பாளர்கள் ச.முருகானந்தம், மு.தமிழரசன், மு. பிரபாகரன், ரா. முனியராஜ் மற்றும் நகர் கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.*

---

## இராமேஸ்வரத்தில் - கொலை செய்யப்பட்ட

# பள்ளி மாணவி குடும்பத்தினருக்கு ஆறுதல்!

### காதர் பாட்சா முத்துராமலிங்கம் நேரில் சந்தித்தார்!

*ராமேசுவரம்,நவ.23-*

*இராமேசுவரத்தில் பள்ளி மாணவி கொலை செய்யப்பட்ட நிலையில் அவரது குடும்பத்தினரை ராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி குற்றவாளிக்கு கடும் தண்டனை கிடைத்திட அரசு நடவடிக்கை எடுக்கும் என உறுதியளித்தார்.*

*இராமநாதபுரம் மாவட்டம் இராமேசுவரம் அடுத்துள்ள சேராங்கோட்டை மீனவ கிராமத்தைச் சேர்ந்த மீனவர் மாரியப்பன் இவரது மகள் ஷாலினி(17) பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 படித்து வருகிறார்.*

*அதே பகுதியைச் சேர்ந்த குப்புசாமி மகன் முனியராஜ்(21) ஷாலினியை ஒரு தலைபட்சமாக காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. இதனை ஏற்க மறுத்த மாணவியை முனியராஜ் நேற்று புதன்கிழமை கொலை செய்தார்.*

*இதனைதொடர்ந்து, காவல்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுத்து முனியராஜ் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைக்கப் பட்டார்.*

*இந்த நிலையில், உயிரிழந்த மாணவி குடும்பத்தினரை இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், நேரில் சென்று சந்தித்து ஆறுதல் கூறியதுடன். மாணவியை கொலை செய்த குற்றவாளிக்கு கடுமையான தண்டணையை தமிழ்நாடு அரசு பெற்றுத் தரும் என உறுதி அளித்தார்.*

*மேலும் பாதிக்கப்பட்டவர்கள் தங்களது பகுதியில் இருந்து பள்ளி மாணவிகள் சென்று வரும் வகையில் காலை மாலை பேருந்து வசதிகள் வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.*

*இதனைதொடர்ந்து, போக்குவரத்து துறை அதிகாரிகளை தொடர்பு காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மாணவ,மாணவிகள் பயன்பெறும் வகையில் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். வரும் திங்கட்கிழமை முதல் பேருந்து இயக்கப்படும் என உறுதி அளித்தார். மாணவி உயிரிழந்த நிலையில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யமொழியை தொடர்பு கொண்ட எம்.எல்.ஏ., மாணவியின் தந்தை,தாய் மற்றும் 10 வது படித்து வரும் இரண்டாவது மகள் சர்மிளா ஆகியோரிடம் பேசி ஆறுதல் கூறினார். மேலும் மாணவியின் கல்விச்செலவை திமுக ஏற்கும் என உறுதி அளித்தார்.*

*இதனைதொடர்ந்து, காதர்பாட்ஷர் முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தனது சொந்த நிதியில் இருந்து ரூ 50 ஆயிரம் வழங்கினார். இதில், நகர் மன்ற தலைவர் கே.இ.நாசர்கான், துணைத் தலைவர் தெட்சிணாமூர்த்தி, நகர் மன்ற உறுப்பினர்கள் சத்தியமூர்த்தி, அர்ச்சுணன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.*


## திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

# கடம்பத்தூர் கிழக்கு, கடம்பத்தூர் மத்திய ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், திருவள்ளூர் மேற்கு மாவட்டம், திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம், **கடம்பத்தூர் கிழக்கு, கடம்பத்தூர் மத்திய** ஆகிய 2 ஒன்றியங்களாக பிரிக்கப்பட்டு, அந்த ஒன்றியங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

மேற்குறிப்பிட்டவாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற ஒன்றிய பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் : 1.அதிகத்தூர், 2.தண்டலம், 3.கீழ்நல்லாத்தூர், 4.மேல்நல்லாத்தூர், 5.போளிவாக்கம், 6.இலுப்பூர், 7.வலசைவெட்டிகாடு, 8.வெள்ளேரிதாங்கல், 9.பாப்பரம்பாக்கம், 10.புதுவள்ளூர், 11.கொப்பூர், 12.வெங்கத்தூர் ஆகிய 12 ஊராட்சிகள்.

**கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் :கே.அரி கிருஷ்ணன்**, வள்ளி தெரு, கபிலர் நகர்,மணவாள நகர்,வெங்கத்தூர் 602 002.

**கடம்பத்தூர் மத்திய ஒன்றியம்**:1.விடையூர், 2.கடம்பத்தூர், 3.புதுமாவிலங்கை, 4.காவங்கொளத்தூர், 5.சிற்றம்பாக்கம், 6.செஞ்சி, 7.இராமன்கோயில், 8.பிரையாங்குப்பம், 9.ஏகாட்டூர் ஆகிய 9 ஊராட்சிகள்.

**கடம்பத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் : ஏ.பிரகாஷ் ஞானஒளி**,பிளாட் எண்.10, பாலாஜி நகர்,செஞ்சி அஞ்சல், பனப்பாக்கம்,திருவள்ளூர் 631 203.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 22.11.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.




தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், சூரங்குடி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.45லட்சம் மதிப்பீட்டில் ஓரடுக்கு கற்சாலை அமைப்பதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் இமானுவேல், சின்னமாரிமுத்து, அன்புராஜன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தலைவர் கலைஞரின் இந்திரஜித்! மாமேதை மாறனின் பெரும்புகழ் ஓங்குக!



**“நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும் பெருமை உடைத்து இவ்வுலகு”**

எனும் குறள் வான்மறைப் போற்றும் வள்ளுவம் வகுத்தளித்த மனித வாழ்வின் எதார்த்த நிலையறிய சொல்லப்பட்டதாகும்.

நேற்றிருந்த மனிதன் இன்று இல்லை என்பதுதான் இந்த உலகிற்கு பெருமை எனக் காலம்காலமாக கண்ணீரஞ்சலிக் கூட்டங்களில் ஆறுதல் கூறினாலும், நமது நெஞ்சங்களில் நின்று, நினைவுகளில் நிலைத்துவிட்டவர்கள் நம்மை விட்டுப்பிரிந்தால், இதில் மாற்றம் ஏற்பட்டு வார்த்தைகள் வராமல் கண்ணீரால் புகழஞ்சலி பூக்கிறது.

தலைவர் கலைஞர் அவர்கள் மீது மாறாத அன்பும், நட்பும் கொண்டு பழகி, ஏழையர்பால் இரக்கமும், தமிழ் மீது பற்றும் மிகுந்திருந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் மறைந்த போது, 29.8.1958 அன்றைய முரசொலியில்,

“யாருண்டு இனிமேலே?” என நமது தலைவர் கலைஞர் அவர்களின் கண்ணீர் கடிதாஞ்சலி படித்தோர் நெஞ்சை உருக்கியது.

தென் தமிழ்நாட்டில், நெல்லைச்சீமையில் நம் கழகம் வளர திணவெடுத்தத் தோள்களோடு பணியாற்றி, மாற்றாரின் வஞ்சக சதிக்கு பலியான கே. வி. கே சாமியின் அகால மறைவிற்கு 21.9.1956 தேதியிட்ட முரசொலியில்,

“ தென்பாண்டி கடல் முத்தே, தீர்ந்ததோ உந்தன் வாழ்வு?” -எனத் தீட்டிய கலைஞரின் இரங்கலுறை இயக்கத்தோழர்களின் இதயத்தில் இரத்தம் வழிந்தோடச் செய்தது.

இளமைகால இதய சுகம் தந்த தனது நண்பன் கண்ணதாசன் மறைந்த போது, 1982 முரசொலியில்,

“கண்ணதாசா, என் எண்ணமெல்லாம் இனிக்கும் நேசா!” எனவும் அதே ஆண்டில் மறைந்த பெரியகுளம் நாடாளுமன்ற உறுப்பினர் கம்பம் நடராசன் குறித்து, “போய்விட்டாயா? போர்வாள் மீசைக்காரா! என்றும் சென்னை முன்னாள் மேயர் மைனர் மோசஸ் மறைவின் போது, முரசொலியில்,

“நெற்கதிர்களை அடுக்கியது போன்ற மீசை கொண்ட அந்த சிறுத்தை உலவிய சிறையில் நானும் இருந்ததை எண்ணி அன்று உள்ளமெல்லாம் பூரித்தேன் என கண்ணீர் மல்கி, கடுந்துயரடைந்து நம்மைவிட்டுப் பிரிந்தோர் பெருமையுரைத்து, அவர்களுக்கு புகழாரம் சூட்டினார் தலைவர் கலைஞர் அவர்கள்.

இப்படித்தான் வரலாற்றில் எத்தனை மனிதர்களை, மாமேதைகளை, மகான்களை, சரித்திரப் புகழ் பெற்றவர்களை சந்தித்தாலும் காலமெனும் காட்டாறு அவர்தம் இழப்பை மெல்ல மறக்கச் செய்தாலும் அதில் ஒரு சிலரின் மறைவு கடலிடையிட்ட நங்கூரம் என பொங்குகடல் அலையாலும் புரட்டமுடியாத நிலைத்தன்மை கொண்டு நெஞ்சில் அவர்தம் நினைவு கடல் அலைபோல வந்து, வந்து வாட்டும்.

அதுபோன்ற மாளாத்துயரை தலைவர் கலைஞர் அவர்கள், “ இத்தனை இன்னல்களுக்கிடையேயும் அண்ணாவின் பிரிவையடுத்து, எந்நாளும் என் மனதில் ஆறாத வடுவாய், ஆழப்பதிந்துவிட்டது என் கண்ணின் மணியான மாறனின் மறைவு. “ எனக் கரையுடைத்துப் பாயும் ஆற்று நீர் போல் கண்ணீர் சிந்திட காலமெல்லாம் தீராத, மாறாத, மறையாத வேதனையை தலைவர் கலைஞருக்களித்த மாமேதை! கலைஞரின் வளர்ப்பு, வார்ப்பு! கலைஞரின் மனசாட்சி! அவரின் இதய சுவாசம், இரத்தம், நாளம், சிந்தனை, செயல், சொல் என தலைவர் கலைஞரின் நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்த அழகுநிறை தோற்றம்மிகுந்த மாமேதை மாறன் அவர்கள் மறைந்தநாள் இந்த நவம்பர் 23.

மாறன் அவர்கள் பிறந்தபோதே தலைவர் கலைஞரின் தாயுள்ளம் களிப்புற அழகுப் பதுமையாய், பின்னர் தத்தித் தளிர்நடையிட்டு, தலைவர் கரம்பற்றி இடராமல் தொடர்ந்து, அவர் தோள்களிலமர்ந்து, மடியினில் தவழ்ந்து, செடியில் மலர்ந்து உதிரும் மலராக இல்லாமல் கொட்டியும், ஆம்பளும் போல் ஒட்டி உறவாடி, உயிருள்ளவரை தலைவரின் கண்ணிற்கு இமையாய், கால்களுக்குப் பாதையாய், கொடும் பகை வீழ்த்தும் வீரவாளாய், வேலாய், கேடயமாய்த் திகழ்ந்த மாவீரன், மாமேதை மாறன் அவர்கள் மறைந்த நாள் இன்று.

“ அண்ணாவின் கண்களுக்கு ஆச்சரியக்குறியாகவும், உன் அன்பு மாமனாம் என் கண்களுக்கு அழகும், அறிவும் கலந்த மாமருந்தாவும் விளங்கி, எந்த மருந்திற்கும் இரக்கம் காட்டி, இரங்கித்தொலையாத இறுதி முடிவிற்கு இயற்கை ஆளாக்கிவிட்டது உன்னை. எதை நினைத்துத் தேற்றிக் கொள்வேன் என்னை? “

என தலைவர் கலைஞர் அவர்கள் உள்ளம் உருகி, இமைப்பொழுதும் மறவாமல் போற்றிப் புகழ்ந்த தியாகதீபம், அறிவுலமேதை, முரசொலி மாறன் அவர்கள்.

கல்லூரி பயிலும் காலத்திலேயே கலைஞர் மீது கொண்ட பற்று, பாசம், அன்பு இவற்றால் எழுத்துலகிலும், இலக்கிய அரங்கிலும் தனது படைப்புக்களை பதிந்திட்ட ஐயா மாறன் அவர்களின் முதல் சிறுகதை, “காட்டுப்பூனை”

பின்னர் முரசொலி வார இதழில், கிரேக்கப்புராணம், கலைத்தோட்டம் என்ற தொடர் கட்டுரைகளை எழுதி, கிரேக்கப்புராணம் நமது நாட்டில் மலிந்திருந்த இதிகாசப் புரட்டுக்களையும், கலைத்தோட்டம் தொடரின் மூலம் உலக சிந்தனையாளர்களை, இலக்கிய சிற்பிகளை வாரம் தோறும் அறிமுகப்படுத்தினார்.

தொடர்ந்து அவரால் முரசொலியில் வெளியிடப்பட்ட பொங்கல் மலரிலும், அண்ணா சிறப்பு மலரிலும் அரசியல் கட்டுரைகள், ஓரங்க நாடகங்கள் இடம் பெற்று இளைஞர்கள் மனதை பெரும் கொள்ளை கொண்டது.

தலைவர் கலைஞர் அவர்களைப் பின்பற்றி, எப்படி தலைவர் அவர்கள் முரசொலியில் ஆரம்ப நாட்களில் பொன்முடி எனும் பெயரில் கடிதமும், சுழல் விளக்கு, எழுத்தாணி போன்ற பெயர்களில் கேள்வி :பதில் அமைத்து, படிப்போர் சிந்தனை தெளிவு பெற வைத்தாரோ அதே போன்று 1960 லேயே அவரது 26 வது வயதில் மாறன் பதில்கள் எனும் பகுதியை ஏற்படுத்தி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைபிடிப்பு, இலட்சியம் இவற்றை தான் எதிர்கொள்ளும் கேள்விகளுக்கு அளிக்கும் விடையிடையே இதமாய் புகுத்துவார்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் டெல்லிக்கு அனுப்பப்பட்ட 1967 லிருந்து, அவர் மறைந்த 2003 வரை தனது வாழ்நாளின் பெரும்பகுதியை நாடாளுமன்ற உறுப்பினராக, நற்தமிழ் நாட்டின் உரிமைக்காக, தென்மாநிலங்கள் புறக்கணிக்கப்படு வதை பாராளுமன்றத்தில் பாசறை முழக்கமிட்டு, மாநில சுயாட்சிக்கு மகுடம் தந்து, கேட்போர் மனதில் ஏற்புடைய வாதம் புரிந்து பல இளம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்மாதரியாய் திகழ்ந்தவர் மாமேதை மாறன் அவர்கள்.

இந்திய ஒன்றியத்தில் மிக முக்கிய அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தபோதெல்லாம் அவரின் அறிவுப்பூர்வமான வாதங்கள் பாராளுமன்ற பேரவையை அலங்கரித்தது.

தலைவர் கலைஞர் அவர்களுக்கே உரிய சமயோசித மொழி நடை ஐயா மாறனிடமும் மிகுந்திருந்தது.

1996 ஒன்றியத்தில் பதவியேற்று 18 நாட்களிலேயே பதவிதுறந்த பாஜக பிரதமர் மறைந்த அடல்பிகாரிவாஜ்பாய் அவர்களைப் பார்த்து, “ A Good man in a Bad “ என நாகரீத்தோடு நையாண்டி புரிந்தார். பிரிதொரு சமயத்தில் ஒற்றுமையற்ற கூட்டணியரசு கவிழ்ந்த நிலையில், “We Want a Stable Government. Not a Dhamasa Government. “ என நக்கல் புரிந்தார்.

நடுத்தர குடும்பத்தில் பிறந்து, மிட்டா மிராசு, பட்டா பவிசு ஏதுமின்றி தனது அன்னை நிகர் அறிவூட்டிய தலைவரை அணுவளவும் மறவாமல், பின்பற்றி, அறிவில் தேர்ந்து, அண்ணாவால் அடையாளம் காட்டப்பட்டு, சூத்திரதாரிகளும், கோத்திரப்புகழ் பேசிடுவோரும், பிரிவினைவாதிகள், அறிவினை ஆயுதம் கொண்டோர் என பன்முக மனிதர்கள் நிறைந்திருந்த தில்லித் தலைநகரில் அதன் சூடு, சூழ்ச்சி, அரசியல் தட்பவெப்பம், ஆள்வோரின் ஆணவப்போக்கு, மொழிவெறி இவற்றை சீர்தூக்கி கழகம் வேர்பிடிக்க வாதங்கள் செய்து, பேதங்கள் மறந்து, மத்தியில் ஆள்வோர்க்கு மாநில சுயட்சியை விளக்கி, திமுகவின் பாதுகாவலராய், கலைஞரின் பிரதிநிதியாய், ராஜதந்திரியாய் திகழ்ந்து தன்னுடன் பணியாற்றிய கழக எம்.பி.க்களுக்கு அரசியல் பாடம் சொல்லி, பலரை வளர்த்து, பன்னாட்டு மன்றங்களில் பேசினாலும், இந்நாட்டின் சிறந்த நாடாளுமன்றவாதி எனும் பெயர் பெரினும் சிறிதும் மாற்றமின்றி,

கூட்டம் கூடிவிட்டால் கோட்டையைப் பிடிக்கலாம் என சிலர் கொட்டமடிக்கும் இந்நாளில், பிரதமரே என்னிடம் பேசிவிட்டார். பிறகென்ன! அடுத்த முதல்வர் நானே என ஆணவம் பேசும் அரசியலில்,

**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
கழக கொள்கைப் பரப்பு
துணைச் செயலாளர்



சுழல் விளக்கும் சுற்றி வரும் தொண்டர் படையும், மாலை, மரியாதை, பட்டாசு, சால்வை, வாழ்த்தொலி முழக்கம் இவற்றின் போதை தலைக்கேறி, தான் வளர்ந்து வந்த பாதையை மறந்து, தீட்டிய மரத்தில் கூர்பார்க்கும் திருட்டு புத்தியும், அன்னமிட்ட வீட்டிலே, கன்னக்கோலிடும் கயவர்கள் நிறைந்த அரசியலில்,

“ நான் மாமா மாதிரி பெரிய எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் வரணுந்தான் நெனச்சேனே தவிர மந்திரியாகணும்னெல்லாம் ஆசைப்பட்டதில்லை “

எனச் சொல்லி, தனது சிந்தனை, சொல், செயல் இவற்றில் தலைவருக்கே கட்டுப்பட்டு,

“ எல்லாப் புகழும் கலைஞருக்கே! என வாழ்நாள் முழுவதும் தலைவர் கலைஞர் புகழ் பாடிய விசுவாசத்தொண்டர் அறிவுலக மேதை முரசொலி மாறன் அவர்கள்.

இத்தகைய சிறப்புகள், பெருமைகள், பட்டங்கள், பதவிகள், மத்தியில் ஆள்வோர் நட்பு, மாநிலங்களவையில் நண்பர்கள் பட்டாளம், பொருளாதார மேதைகளின் நெருக்கம், தொழில் முனைவோர் நட்பு என எவ்வளவு பெரிய இடத்தில் இருந்தாலும்,

“ என்ன இருந்தாலும் நான் தங்கள் வளர்ப்பன்றோ!” என ஆதிநாள் முதல் அகரம் சொல்லித்தந்த ஆசானைத் தான் சிகரம் தொட்ட நாளிலும், எல்லாம் அவரே! என உறங்கும் நிமிடங்களில் கூட, கனவிலும் மாமா, மாமா என்றே சுவாசித்த பெருந்தொண்டர், தலைவர் கலைஞரின் கண்மணி ஐயா மாறன் அவர்கள்.

இன்று அவர் இல்லை. அவருக்கு அரசியலறிவு போதித்த தலைவர் கலைஞரில்லை. அடையாளம் தந்த அண்ணா இல்லை. ஆனால் அவர்கள் காலத்திலும் இல்லாத ஆதிக்க வெறி, வர்க்கபேதம், வர்ணாசிர மமதை, மொழிவெறி சனாதனச் சங்கிகளின் படையெடுப்பு இன்று மிகுந்து மலிந்திருக்கும் நாளில், இவற்றின் ஆணவப்பற்களை உடைத்து, ஆதிக்க நெரிசலைத் தவிர்த்து, தென்னகத்தின் பாதுகாவலராய், தில்லிப்பட்டிணத்திற்கு சிம்மசொப்பனமாய், திகழ்கிறார் நமது கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், திராவிடப் பேரரசர் தளபதியவர்கள்!

**என்னிடம் பெரியாரின் தடியும் இருக்கிறது.**

**அண்ணா தந்த இருவண்ணக் கொடியும் இருக்கிறது.**

தலைவர் கலைஞரின் முற்போக்கு நடையுமிருக்கிறது எனச் சொல்லாமல் தனது செயல்மூலம் நம்மினப்பகைவர்க்கு தனது ஒவ்வொரு நகர்வின் மூலம் புரியவைக்கிறார் நமது தலைவர் தளபதியவர்கள்.

மாமேதை முரசொலி மாறன் அவர்கள் தலைவர் மீதும், கழகத்தின் மீதும் கொண்டிருந்த அன்பு, பற்று, பாசம், பக்தி இவற்றை நாளும் துதிப்போம்.

காலம் நமக்களித்த கலைஞரின் வார்ப்பு, திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்கள் பின்னால் எந்நாளும் அணிதிரள்வோம்.

இதுதான் மறைந்தும், மறையாமல் நமது நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் மாமேதை மாறன் அவர்களுக்கு செலுத்தும் நன்றியுணர்வு! இதயாஞ்சலி!

ஓங்குக தலைவர் கலைஞரின் இந்திரஜித் மாமேதை முரசொலி மாறன் அவர்களின் பெரும்புகழ்!

வெல்வோம் இருநூறு!

படைப்போம் வரலாறு!!